

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, லட்சுமிகாந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் அண்மையில் தனது 100வது பிறந்தநாள் நிறைவடைந்ததையொட்டி நேற்று (13.10.2025) முகாம் அலுவலகத்தில் சந்தித்த போது, முதலமைச்சர் அவர்கள், லட்சுமிகாந்தன் பாரதி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், Foxconn நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் ராபர்ட் வூ அவர்கள் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், Foxconn நிறுவனத்தின் இயக்குநர் செந்தில் குமார், நிர்வாக இயக்குநர் டேவிட் சென், இயக்குநர் தினகர் மல்லாடி, நிருவாகிகள் திருமதி ஹன்னா வாங், சுஜாய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டியை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10,2025) தமிழ்நாட்டில் முதல்முறையாக சென்னை நேரு விளையாட்டு அரங்கில் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சர்வதேச தரத்தில் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 14.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி கூடைப்பந்து பயிற்சி இயந்திரத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலைகள், சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார். இதில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முடிவுற்ற 4 திட்டப்பணிகள் திறப்பு

# சுற்றுலா துறை சார்பில் ரூ.16.30 கோடியில் 5 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, அக்.14 -**

**சுற்றுலாத்துறையில் ரூ.7.46 கோடி செலவில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ. 16.30 கோடி மதிப்பிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை, கரூர் மாவட்டம் பொன்னணியாறு அணை மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில் 7.46 கோடி செலவில் முடிவுற்ற 4 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 16.30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

ஏராளமான உள்ளூர் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத் துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட 4 முடிவுற்ற திட்டப்பணிகள்!**

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் நோக்கில், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம், நடைபாதை, வாகன நிறுத்துமிடம், முகப்பு வளைவு, உணவகம், சுகாதார வளாகம் உள்ளிட்ட பல்வேறு பணிகள், தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் புதிய காட்சிமுனைகள் அமைக்கப்படுவதை தொடர்ந்து, ஜவ்வாது மலை சுற்றுச்சூழல் பூங்கா பகுதியில் 49 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய காட்சிமுனை மற்றும் தள மேம்பாட்டுப் பணிகள்;

கரூர் மாவட்டத்தில் உள்ள பொன்னணியாறு அணையில் 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட படகுத்துறை பணிகள், சுகாதாரப் பணிகள் உள்ளிட்ட பணிகள்; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்;

என மொத்தம் 7 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 4 சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்ட 5 புதிய திட்டப்பணிகள்!**

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரியில் 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படகு குழாம், நுழைவு வளாகம், தள மேம்பாடு மற்றும் மின் வசதிகள் உள்ளிட்ட பணிகள்;

திண்டுக்கல் மாவட்டம், புல்லாவெளி அருவி மற்றும் ஒட்டன்சத்திரம்இடையக்கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி ஆகியவற்றில் 5.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுகாதார வளாகம், நடைபாதை, சிறுவர் விளையாட்டு பூங்கா, குடிநீர் வசதி, வழிகாட்டுப்பலகைகள் மற்றும் மின் வசதிகள் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள்;

இராமேஸ்வரத்தில் 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓட்டல் தமிழ்நாடுக்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகளுடனான கட்டுமானப் பணிகள்;

என மொத்தம் 16 கோடி 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலாத்துறை இயக்குநர் தா. கிறிஸ்து ராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக பொது மேலாளர் திருமதி.ச.கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.




கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வழுதலாம்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்பு பார்வையாளராக கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், பயிற்சி ஆட்சியர் மாலதி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஷபானா அஞ்சும் உட்பட பலர் உள்ளனர்.

## நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை - கூடலூர் - குன்னூர்

# சட்டமன்றத் தொகுதி கழக வாக்குச் சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ வேண்டுகோள்!

நீலகிரி, அக். 14 -

நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை - கூடலூர் - குன்னூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட தி.மு.க. வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA-2) கூட்டம், நாளை (15.10.2025 - புதன்கிழமை) காலை 10.30 மணியளவில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் எனது மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில், கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் - அரசு கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), ஆர்.பி.பரமேஸ்குமார் (கூடலூர்), அ.திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.



இக்கூட்டத்தில், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் - முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி மற்றும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே, அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்களால் நியமிக்கப்பட்டுள்ள கழக வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA-2) அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு -பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திராவிட இயக்க கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, சென்னை – கீழ்கட்டளை பகுதியில், கழக மண்டலக் குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை முன்னிலையில், வட்டச் செயலாளர் ரங்கநாதன் தலைமையில், முரசொலி ஊழியர் திருமதி பி.விஜயலட்சுமி ஏற்பாட்டில் 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சிகளின் மகளிர் கழகத்தில் இணைந்தனர்.